JTM தமிழ்ப் பள்ளி
ஓதுவது ஒழியேல்

மயில் 5 : இறகு: 2

# மயிலிறகு

04.15.2024



## உள்ளே...


பள்ளி பக்கம் 03

நிலை 2 மாணவர்களின் பங்களிப்பு 05

ஷக்தி ஸ்ரீ, மழலையின் சித்திரம் 10

திருட்டு நரியும் புத்திசாலி முயலும் 12

கண்டுபிடி கண்டுபிடி 14

என் வீட்டுத் தோட்டத்தில்
பூவெல்லாம் கேட்டுப்பார் 15

செய்திகள் 17

# தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்



## பிரதிபா






# தமிழ் மூன்றெழுத்து கவிதை !!! பறை இரண்டெழுத்து இசை!!!!

நான் இப்போ ஒரு ஆறு மாத காலமாக பறை கற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த பறை நம்ம தமிழ் கலாச்சாரத்தில், மக்கள் வாழ்க்கை முறையில் ஒரு பெரும் பங்கு வகித்து வந்திருக்கிறது. இந்த இசை 'த' மற்றும் 'கு' என்ற இரண்டெழுத்தை மட்டும் கொண்டது. கையிலிருந்து வரும் சக்தி, குச்சியை உருட்டும் முறை, அடிக்கும் இடம், ஏற்ற இறக்கங்கள் தான் அந்த இசையை மிக்க வலிமையாக மாற்றுகிறது. எந்த ஒன்றை மாற்றினாலும் இசை வடிவம் மாறி வரும். அந்த வடிவம் நன்றாகவும் இருக்கலாம் இல்லை அடி பிறழ்ந்தும் போகலாம். மிக கவனமாக குச்சிகளை கையாள வேண்டும். இந்த இசையை அடிக்க, பழக, மனம், புத்தி, உடம்பு, அனைத்தும் ஒன்றாக வேலை செய்ய வேண்டும். இசையா அடிக்கும் போது, கை அடிக்கும், மனம் எண்ண வேண்டும், கால் ஆட வேண்டும், தாளத்தை மூன்றும் இணைக்க வேண்டும் என பல சங்கதிகளை உள்கொண்டது. ஒரு ஒருமித்த நிலை பயிற்சி அல்லது பல காரியங்களை ஒரே நேரத்தில் செய்யும் பயிற்சி. பயிற்சி முக்கியம்.

நம் தமிழ் மொழியில் இருநூற்று நாற்பத்தியேழு எழுத்துக்கள் உள்ளன. அதன் வளமை, செழுமை, இளமை, பழமை என பல பெருமைகளை சொல்லலாம். நமது குழந்தைகளுக்கு தமிழ் படிப்பது எளிமையான விஷயம் அல்ல. பறை இசையில் இரண்டெழுத்து அதனை வசம் கொண்டு வர பல வாரங்கள், மாதங்கள் ஆண்டுகள் பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சி ,மூலம் தான் அதனை நம் வசப் படுத்த முடியும். தமிழ் மொழியும் அது போலத்தான். நமது குழந்தைகளுக்கு தினந்தோறும் தமிழ் பயிற்சி கொடுக்க வேண்டும். அது தமிழ் சினிமாவோ, பாட்டோ, உரையாடல்கலோ, இல்லை ஏதுவாகவோ இருக்கட்டும். அது தமிழில் இருக்க வேண்டும், அவர்கள் அதில் பங்கு கொள்ள வேண்டும். தமிழ் மொழியை கற்று கொள்வதை ஒரு "*after school activity* " மாதிரி பழக கூடாது. அது நம் அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். நம் குழந்தைகளுக்கு தமிழ் மொழி ஒரு பாரமாக இல்லாமல் ஒரு அன்றாட விஷயமாக இருக்க வேண்டும். சாப்பாடு தினந்தோறும் சாப்பிடும் ஒன்று.

நாம் அனைவரும் அதை தினந்தோறும் விரும்பி சாப்பிடுவதில்லை ஆனால அவசியம் சாப்பிடுவோம். அதே போலத்தான் நம் குழந்தைகளுக்கு தமிழ் கற்று கொளவ்துமம். அது எப்பொழுதுமே பிடித்தமானதாகவோ, சந்தோசமானதாகவோ இருக்காது; ஏற்ற தாழ்வுகள் சகஜம். அதை நாம் புரிந்து கொண்டு பயிற்சி முறையை விட்டு விடக் கூடாது. அவர்கள் புத்தி, மனம், உடம்பு மூன்றும்

ஒத்துழைத்து தமிழ் கற்று கொள்ள வேண்டும். சில சமயங்களில் பாசம், சில சமயங்களில் கண்டிப்பு, சில சமயங்களில் ஊக்குவிப்பு என நேரத்துக்கு சகுந்தபடி நாம் அவர்களை தமிழுக்கு பழக்க வேண்டும். நம்ம குழந்தைகள் வளர்ந்து இருபது வயசுக்கு மேல கல்லூரி முடித்து விட்டு நம்ம கிட்ட எனக்கு ஏன் தமிழ் சொல்லி கொடுக்கலை, என்னால ஏன் சரளமா பேச, படிக்க முடியலை அப்படிங்கற மாதிரி வச்சுக்க கூடாது.

பறை இரண்டெழுத்து இசை!!

தமிழ் மூன்றெழுத்து கவிதை!!!!

இரண்டையும் வசப் படுத்த ஒரே முறை தான்.... மனம், புத்தி, உடம்பு ஒன்றுபடுத்திய பயிற்சி! நாள் தோறும் பயிற்சி!! நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதை எப்படி பயன் படுத்த வேண்டும் என்று நமது அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் அதனை நம் வசப் படுத்த முடியும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!!! நீங்கள் உங்கள் குழந்தைக்கு தமிழை எப்படி வசப் படுத்த கற்றுக் கொடுக்கலாம் என சிந்தியுங்கள்!!!

உங்களது கருத்துக்களை நீங்கள் தாராளமாக பதிவு செய்யலாம். எந்த கருத்தும் தவறானது அல்ல. எந்த ஒரு சிறு விஷயமும், பங்களிப்பும் நாம் எடுக்கப் போகும் முடிவுக்கு உறுதுணையாக இருக்கலாம்.

உங்களை மீண்டும் அடுத்த இறகில் அடுத்த பள்ளி பக்கத்தில் சந்திக்கும் வரை உங்களிடம் இருந்து விடை பெறுவது...பள்ளி நிர்வாக குழு.

# கண்டுபிடி கண்டுபிடி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | க | ரா | ஹூ | ச | றி | ன் | ப |
| கு | உ | ர | ல் | ழ் | ஞ | ங் | சி |
| ஊ | ரு | ட் | டி | கு | ரு | வி | ல |
| ஒ | ட் | ட | க | ம் | எ | ஜ | ந் |
| தை | த் | று | சி | டி | று | ம் | தி |
| கே | யெ | தி | ம | ன் | லை | ட் | ட |
| து | பு | ம் | று | எ | ணா | க | ந |
| லி | டை | ந | ரி | ம் | லி | ஓ | த |

விடை 17-ம் பக்கம் பார்க்க

# Nilai 2 Student Presentations

## நிலை 2 மாணவர்களின் பங்களிப்பு



Aadavan Manikandan – 08/26/2023




Abijith Prasanna – 09/09/2023




Aditi Subramaniam – 09/16/2023

Akilan Sugumar 09/23/2023








Aaradhana Anandh – 09/30/2023




Darshana Karthikeyan: 10.14.2023



பாரம்பரிய உணவிற்கு மாறுவோம்

- மனிதன் உயிர்வாழ உணவு அவசியம். அதே மனிதன் ஆரோக்கியமாக வாழ சத்தான உணவு மிகவும் அவசியம்.
- ஊட்டச் சத்துக்களை அதிகம் தரும் உணவு எது என்றால், நம் பாரம்பரிய உணவான சிறு தானிய உணவுகளே.
- நம் முன்னோர்களின் உணவில் சிறுதானியங்களுக்கு முக்கிய பங்கு இருந்தது.
- காலப்போக்கில் நாகரிகம் என்ற பெயரில் உடம்புக்கு ஒத்துவராத துரித உணவுகளின் பக்கம் சாய்ந்து நம் அடுத்த தலைமுறைகளையும் அந்த சுவைக்கு அடிமையாக்கிவிட்டோம். அதன் பலனையும் இன்று அறுவடை செய்ய தொடங்கிவிட்டோம்.
- இளம் வயது பருவத்தை கடக்கும் முன்பே உடல்பருமன், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், இருதய நோய், புற்று நோய் என நோய்களைத் தேடி சேர்த்துக்கொள்கிறோம்.
- பாரம்பரிய உணவின் மகத்துவத்தை குழந்தைகளுக்கும் உணர்த்தி, உடல் ஆரோக்கியத்தை காக்கும் பாரம்பரிய உணவிற்கு மாறுவோம். உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வோம்.









Hannah John – 11/01/2023




Harinitha Srinivasan:12/09/2023




Mahil Vijayendra 11/18/2023

Mahil's presentation. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் அதன் பயன்கள்




Niralya Vijay 01/27/2024








Niriksha Selvendran 02/17/2024






**Rakshana**
**Karthikeyan**
**02/24/2024**







**Special guest – Mrs. Muthulakshmi – Aditi Subramaniam's Grandmother.**
**Retired High secondary Tamil Teacher in Tamil Nadu**
**Nilai 2 and Nilai 7 students**

# ஷக்தி ஸ்ரீ, மழலை









# திருட்டு நரியும் புத்திசாலி முயலும்

ஒரு காட்டுல ஒரு தந்திரகார நரி வாழ்ந்துகிட்டு வந்துச்சு, அந்த நரி சொந்தமா உணவு சேகரிச்சு சாப்பிடலாம காட்டு மிருகங்கள் கிட்ட இருந்து திருடி தின்னுகிட்டே இருந்துச்சு



இத பார்த்த எல்லா மிருகங்களும் நரிகிட்ட பத்திரமா நடந்துக்கிச்சுங்க ,நரி கண்ணுல படுறமாதிரி எதையும் வைக்காதுங்க அதுங்க



இருந்தாலும் அந்த பொல்லாத நரி எப்படியோ காட்டு மிருகங்கள் சேமிச்சு வச்சிருக்கிற உணவு தானியங்கள் எல்லாத்தையும் கண்டுபிடிச்சி திருடி தின்னுகிட்டே இருந்துச்சு



அப்பத்தான் ஒரு புத்திசாலி முயல் அந்த நரிய பார்த்துச்சு ,அடடா சொந்தமா உணவு சேமிச்சு வாழ்கை நடத்தாம இப்படி திருடி திங்குற நரிக்கு சரியான பாடம் புகட்டணும்னு நினைச்சிச்சு



உடனே காட்டு பகுதியில ஒரு நல்ல இடத்துல நான் விவசாயம் பார்க்க போறேன் ,அதனால இந்த இடத்துல வெள்ளரி தோட்டம் போட போறேன்னு சொல்லிட்டு கொஞ்ச நேரம் வேலை செஞ்சுச்சு. இத தூரத்துல இருந்து பார்த்த நரி வெள்ளரி தோட்டம் போடுதா முயல் ,அப்ப கொஞ்ச நாள் கழிச்சு நமக்கு சரியான தீனி இருக்குனு நினைச்சுகிட்டு தினமும் அங்க வந்து வெள்ளரி கச்சிடுச்சான்னு பார்த்துகிட்டே இருந்துச்சு



கொஞ்ச நாள் கழிச்சு வெள்ளரி காய் காய்க்க ஆரம்பிச்சுச்சு ,உடனே அங்க வந்த நரி வேகா வேகமா வெள்ளரி தோட்டத்துக்குள்ள புகுந்து வெள்ளரி எல்லாத்தையும் பிச்சி திங்க ஆரம்பிச்சுச்சு



அப்பா திடீர்னு நரிக்கு உடம்பு எல்லாம் அறிக்கை ஆரம்பிச்சுச்சு ,கொஞ்ச நேரத்துல உடம்பு பூராம் தடிப்பு தடிப்பா வந்து அங்கேயே விழுந்துடுச்சு



அப்ப அங்க வந்த முயல் சொல்லுச்சு நீ பெரிய திருட்டு பயனு எனக்கு தெரியும் அதனாலதான் ஒவ்வொரு வெள்ளரி செடிக்கு பக்கத்துலயும் ஒரு அரிப்பு செடிய நட்டு வச்சேன்.



வெள்ளரி பிடுங்குற அவசரத்துல நீ அந்த அரிப்பு செடியில் உடம்ப தெச்சதுனால தான் உனக்கு உடம்பு இப்படி ஆகிடுச்சுனு சொல்லுச்சு அத கேட்ட எல்லா மிருகங்களும் அங்க வந்து நரிய பார்த்து சிரிச்சுச்சுங்க ,தங்களோட உழைப்ப எல்லாம் திருடி தின்ன நரிக்கு சரியான தண்டனை கிடைச்சுச்சுனு சொல்லிட்டு அங்க இருந்து போயிடுச்சுங்க.

உழைச்சு சாப்பிடாம அடுத்தவங்க பொருள திருடி தின்ன அந்த நரிக்கு யாருமே உதவ வரல அப்பதான் இத்தனை நாள் தான் செஞ்ச தப்புக்கு எல்லாம் சரியான தண்டனை கிடைச்சுடுச்சுனு நினைச்சு திருந்தி வாழ ஆரம்பிச்சுச்சு அந்த நரி

# கண்டுபிடி
கண்டுபிடி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | கு | வ | ர் | உ | ன் | வ | ஒ | அ | ஆ |
| அ | ல் | யி | ஆ | ஊ | இ | ஊ | கூ | ண் | டு |
| ம் | வி | க் | ல் | வி | எ | ஞ் | ளி | அ | ஆ |
| வ் | ஐ | த | மி | ஔ | று | கி | எ | ரு | து |
| ப | இ | க் | ஒ | எ | ம் | டி | வ | ஊ | லி |
| ல் | கி | டு | வி | பி | பு | அ | ல் | ஞ் | ஐ |
| ள் | மா | யி | க் | டி | டு | ஊ | கு | ச | யி |
| ச | து | ர | ம் | ப | ட் | ட | ம் | ல் | அ |

விடை 16-ம் பக்கம் பார்க்க




# என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப்பார்

## சுபா கார்த்திக்

பூக்கள் என்றால் எனக்கு கொள்ளை பிரியம். அமெரிக்கா வந்து இறங்கியவுடன் வீட்டுக்கு நான் முதலில் வாங்கியது இரண்டு ரோஜா செடிகள். சாமிக்கு கூட பார்த்து பார்த்து இரண்டு அல்லது மூன்று தான் பறிப்பேன். வசந்த காலம் வந்தால் வார்த்தைகளால் சொல்லமுடியாத ஒரு சந்தோஷம். விதைகள் மட்டும் முப்பது டாலருக்கு வாங்குவேன். சூரியகாந்தி, ஜினியா, ரோஜா, கனகாம்பரம், பவளமல்லி என்று வருடத்துக்கு ஐந்து புதிய வகை பூக்கள் வாங்குவேன்.

விஞ்ஞானம் வளர்ந்ததால் ஏன் கையிலும் ஐ அலைபேசி வந்தது. என் தோட்டத்து பூக்களை படம் பிடித்து வைத்துக்கொள்வேன். தினமும் நான்கு அல்லது ஐந்து பூக்களை நான் வேலை செய்யும் மறுவாழ்வு மையத்திற்கு கொண்டு செல்வேன். இதை தினமும் கவனித்த ஒரு நோயாளி என்னை கூப்பிட்டு மிகவும் பாராட்டினார். பிறகு என்னிடம் உனக்கு பட்டாம்பூச்சி பிடிக்குமா என்று கேட்டார். எனக்கு ரொம்ப பிடிக்கும் என்றேன். உடனே சில விதைகளை குடுத்து இதை உன் தோட்டத்தில் விதை செடி வளரும். இந்த செடிக்கு பட்டாம்பூச்சி உன் வீடு தேடி வரும் என்றார். அந்த செடியின் பெயர் மில்க் வீட். உனக்கு இதை பற்றி எதாவது சந்தேகம் இருந்தால் செவிலியர் (நர்ஸ்) ஜூடி இடம் கேள் என்றார். செடி வளர்த்தது, பூ பூத்தது. பட்டாம்பூச்சி வரவில்லை.

ஒரு நாள் பூ பறிக்க தோட்டத்திற்கு சென்றேன். பச்சை மஞ்சள் நிறத்தில் கருப்பு கோடுகளுடன் புழுக்கள். இலைகளில் ஓட்டை மற்றொரு செடியில் இலையே காணவில்லை. பூச்சி கொல்லி மருந்தை நான் உபயோகபடுத்த மாட்டேன். பட்டாம்பூச்சி எதிர்பார்த்து புழுக்கள்





வந்தது தான் மிச்சம் என்று எண்ணி ஒரு புழுவை டப்பாவில் அடைத்து என்னுடம் வேலை செய்யும் நர்ஸ் ஜூடி இடம் காட்டினேன். இந்த புழுவை எப்படியாவது என் தோட்டத்திலிருந்து விலக்க வேண்டும் இதற்க்கு ஒரு இயற்கையான வழி உண்டா என கேட்டேன்.

ஜூடி என்னை பார்த்து சிரித்து கொண்டே வண்ணத்துபூச்சி வரவில்லை என்றாய் உனக்கு இந்த புழு மட்டும் எப்படி கிடைத்தது என்று கேட்டார். இது மொனார்க் வண்ணத்துப்பூச்சியின் புழு. இதை ஒரு கண்ணாடி டப்பாவில் போட்டு தினமும் மில்க் வீட் இலைகளை போடு இரண்டு வாரத்தில் பட்டாம்பூச்சி ஆகிவிடும் என்றார். அந்த புழுவை கண்ணாடி டப்பாவில் வைத்து தினமும் இல்லைகளை உணவாக பறித்து போட்டேன். முதல் நாள் ஒரு இலை தின்றது. மறுநாள் இரண்டு மூன்று இலைகளை தின்றது, ஐந்தாவது நாள் கடோட்கஜனை போல ஏழு எட்டு இலைகளை தின்றது. செடியில் இலைகளே இல்லை. உடனே லோவேஸ்க்கு சென்று நான்கு புதிய மில்க் வீட் செடிகளை வாங்கி வந்தேன்.

ஜூடி என்னிடம் அந்த கண்ணாடி டப்பாவில் ஒரு குச்சியை போடு புழு அதில் கூடு கட்டும் என்று சொன்னார். எட்டாவது நாள் புழு நூறு மடங்கு வளர்ந்து அந்த குச்சியில் தலைகிழாக நின்றது. அன்று சாயங்காலம் வேலை முடிந்து வந்து பார்த்தால் பச்சை நிறத்தில் ஒரு கூடு குச்சியில் தொங்கிக்கொண்டு இருந்தது. ஒரு வாரம் கழிந்தது, பச்சை நிற கூடு கருப்பு சிகப்பு நிறமாக மாறியது. கருப்பு நிறத்தை பார்த்தவுடன் இறந்து விட்டதோ என்று நினைத்தேன். ஜூடி அன்று வேலைக்கு வரவில்லை அவர்களுடைய தொலைபேசி எண் கூட என்னிடம் இல்லை. மாலையில் வீடு திரும்பியதும், ஜன்னல் ஓரத்தில் கண்ணாடி ஜாடியினுள் அழகான வண்ணத்துபூச்சி பறந்துகொண்டு இருந்தது. என் மகளுக்கும் மகனுக்கும் சந்தோசம் தாங்கமுடியவில்லை. பட்டாம்பூச்சியை கண்ணாடி டப்பாவில் வைத்துகொள்ள ஆசை அவர்களுக்கு. எனக்கும் கூட தான்.

பட்டாம்பூச்சிக்கு "ஸ்ரீசன் கார்த்திகேயன்" என்று பெயர் வைத்தேன். "ஸ்ரீ" ஸ்ரீவித்யாவின் முதல் எழுத்து, "சன்" வ்ருசனின் கடைசி இரண்டு எழுத்து. ஸ்ரீசன் ஏன் வளர்ப்பு பிள்ளை, அவனை ஏன் தோட்டத்தில் பறக்கவிட்டேன். அவன் ஜினியா மலரின் மேல் சென்று அமர்ந்தான். என் தோட்டத்தில் எந்த பூக்களை கேட்டாலும் அவை பட்டாம்பூச்சிகளை பற்றி கதை சொல்லும், குறிப்பாக ஸ்ரீசன் பற்றி பாட்டு கூட பாடும்.

## கண்டுபிடி கண்டுபிடி... 14-ம் பக்கம் விடைகள்



# செய்திகள்

- அடுத்த (2024-25) கல்வியாண்டிற்குகான பள்ளிப் பதிவு 04/15/2024 அன்று தொடங்கி 06/08/2024 முடிவடைகிறது
- ஆன்லைனில் பதிவு படிவத்தை பூர்த்தி செய்து, கட்டணத்தை zelle மூலம் சமர்ப்பிக்கவும்.
- ஏதேனும் கேள்விகள் இருந்தால், jacksonvilletamilpalli@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் JTM தமிழ் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும்
- பதிவுக்கான இணைப்பு இதோ https://forms.office.com/pages/re-sponsepage.aspx?id=uWCNQ1GDI0eavvJvrXXNU1t_CWKAbN-BLt3p2UTwAKUJUMlZCQzlIMlhKRDU5NUJXUlExMzhZNU80Si4u
- 4/20/24 அன்று 2023-24 தமிழ் பள்ளி ஆண்டுவிழா

## கண்டுபிடி கண்டுபிடி... 4-ம் பக்கம் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கரடி | ஓணான் | நரி | எறும்பு | சிலந்தி |
| சிறுத்தை | ஒட்டகம் | பன்றி | குருவி | எலி |

**School mail: Gmail**
**jacksonvilletamilpalli@gmail.com**
**Send your contributions mail:**
**Kathiravan@jtmtamilpalli.onmicrosoft.com**
**Pradeekutty@yahoo.co.in**

**Send your feedback:**
**Kathiravan@jtmtamilpalli.onmicrosoft.com**
**Pradeekutty@yahoo.co.in**

**Website- https://jtmtamilschool.org**

**Youtube: https://youtube.com/@JTMTamilPalli**

**Instagram: https:**

**//instagram.com/jtmtamilpalli?igshid=MzRlODBiNWFlZA==**

**Facebook:**

**https://www.facebook.com/groups/1064996684922295/permalink/1064997284922235/?mibextid=S66gvF**

**Linked In:**

**https://www.linkedin.com/company/jacksonville-tamil-palli/**